**அனுப்புநர்**

சா. சேதுராமவர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – **600 006.**

**பெறுநர்**

செய்தி ஆசிரியர்,
அனைத்து ஊடகங்கள்

**ந.க.எண். 011220 / எப்1 / 2021** **நாள் : 12.11.2021**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள் :** செப்டம்பர் **2021** – மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத்தேர்வு – விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிப்பதற்கு கூடுதலாக கால அவகாசம் வழங்குதல் குறித்து செய்திக்குறிப்பு வெளியிடக் கோருதல் – தொடர்பாக.

-----

செப்டம்பர் **2021** மாதத்தில் நடைபெற்ற மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத்தேர்வு விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிப்பதற்கு கூடுதலாக கால அவகாசம் வழங்குதல் தொடர்பான செய்திக்குறிப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இச்செய்திக்குறிப்பினை தேர்வர்கள் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி தங்கள் நாளிதழில் / தொலைக்காட்சியில் / வானொலியில் செய்தியாக வெளியிடும்படி கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இது செய்திக்குறிப்பு மட்டும். விளம்பரம் அல்ல.

**ஒம்/–**
**இயக்குநர்**

**இணைப்பு:** செய்திக்குறிப்பு

<u>அரசுத் தேர்வுகள் இயக்ககம் சென்னை–600 006</u>

<u>மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத்தேர்வு செப்டம்பர் 2021</u>

<u>விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிப்பதற்கு கால அவகாசம் நீட்டித்தல் குறித்த செய்திக்குறிப்பு</u>

செப்டம்பர் 2021, மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத் தேர்வுக்கான விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர்கள் சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு **<u>11.11.2021 (வியாழக் கிழமை) மற்றும் 12.11.2021 (வெள்ளிக் கிழமை)</u>** ஆகிய இரண்டு நாட்களில் நேரில் சென்று உரிய கட்டணம் செலுத்தி பதிவு செய்து கொள்ளுமாறு ஏற்கனவே அறிவிக்கப்பட்டது.

தற்போது செப்டம்பர் 2021, மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத் தேர்வுக்கான விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு நேரில் சென்று விண்ணப்பிப்பதற்கு **15.11.2021 (திங்கட் கிழமை)** அன்று ஒருநாள் கூடுதலாக கால அவகாசம் வழங்கப்படுகிறது .

ஒம்/–
இயக்குநர்

<u>இடம் :</u> சென்னை–600 006.
<u>நாள் :</u> 12.11.2021.